செ.வெ.எண்: 32 நாள்: 10.03.2017

# புதுக்கோட்டை மாவட்டத்தில் மாணவ, மாணவிகளுக்கு ரூ.90 ஆயிரம் மதிப்பில் மாநில அளவிலான பொது பரிசுத்தொகைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் மாணவ, மாணவிகளுக்கு மாநில அளவிலான பொது பரிசுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.03.2017) வழங்கினார்.

இதில் மாணவ, மாணவிகளுக்கு பொதுப்பரிசுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கி கூறியதாவது:

தமிழகஅரசு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி அரசு இடஒதுக்கீட்டில் தனியார் பள்ளிகளில் கல்வி கற்று அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் பரிசுத்தொகை வழங்கப்படுகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 496 மதிப்பெண்கள் பெற்ற புதுக்கோட்டை மௌண்ட் சியோன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவன் விக்னேஷ், கந்தர்வக்கோட்டை வித்யா விகாஷ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவன் ராகேஷ், வைரம்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவன் கார்த்திக்விக்ரம், பொன்னமராவதி அமலா அன்னை மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவிகள் கிருபா மற்றும் ஆயிஷாசீமா, கே.ராசியமங்கலம் மேரி இம்மாகுலேட் மெட்ரிக் பள்ளி மாணவி பிரின்சி என மொத்தம் 6 மாணவ, மாணவிகளுக்கு தலா ரூ.15000/- என மொத்தம் ரூ.90 ஆயிரம் மதிப்பில் மாநில அளவிலான பொது பரிசுத்தொகைக்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளது. தமிழகஅரசின் இத்தகைய பரிசுத்தொகையை பெறும் மாணவ, மாணவிகள் சிறப்பாக கல்வி கற்று அதிக மதிப்பெண்கள் பெற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.சுபகாளீஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**